# விடுப்பு மற்றும் இதர விடுப்புகள்

1 தற்செயல் விடுப்பு

2 மதச்சார்பு விடுப்பு

3 தாமத வருகை மற்றும் அனுமதி

4 பண்டிகைகளுக்கான சிறப்பு அனுமதி

5 சிறப்பு தற்செயல் விடுப்பு

6 ஈடு செய் விடுப்பு

7 மகப்பேறு விடுப்பு

8 ஈட்டிய விடுப்பு

9 சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

10 .ஊதியமில்லா விடுப்பு

11 Hospital Leave

12 மருத்துவ விடுப்பு

13 Special Disability Leave

14 உயர் கல்விக்கான விடுப்பு

15 ஒப்புவிப்பு விடுப்பு

# 1.தற்செயல் விடுப்பு

1) ஒரு ஆண்டுக்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படும். தற்செயல் விடுப்பை அரசு விடுமுறைகள், ஈடு செய் விடுப்பு முதலியவற்றுடன் இணைத்தும் எடுக்கலாம். ஆனால் ஒரே நேரத்தில் எடுக்கும் மொத்த விடுப்பு பத்து நாட்களுக்கு அதிகமாகாமல் இருக்க வேண்டும். (அடிப்படை விதியின் இணைப்பு VII) இருப்பினும் 11வது/12வது நாள் எதிர்பாராத விதமாக அரசு விடுமுறை என அறிவிக்கப்பட்டால் பத்து நாட்களுக்கு மேலும் தற்செயல் விடுப்பு அனுபவிக்கலாம். (அ.ஆ. எண். 309, நிர்வாகத்துறை, நாள் 16.8.93)

2) முன்னரே ஒப்புதல் பெறும் தற்செயல் விடுப்புக்கான விண்ணப்பத்தில் விடுப்பிற்கான காரணம் குறிப்பிடத் தேவையில்லை – (அரசாணை எண் 1410, நிர்வாகத்துறை, நாள் 2.12.1997)

3) தற்காலிகப் பணியாளர் மற்றும் தகுதிகாண் பருவத்தினருக்கு இரண்டு மாதங்களுக்கு மூன்று நாட்கள் என்ற அளவில் (மொத்தத்தில் 12 நாட்களுக்கு அதிகமாகாமல் ) இவ்விடுப்பு வழங்கப்படும்.

4) கணக்கில் தற்செயல் விடுப்பு இல்லாதவருக்கு முன் அனுமதியுடன் ஈட்டிய விடுப்பு வழங்கப்படும் – (அடிப்படை விதி 67ன் துணை விதி (3).

5) 30 நாள் பணி முடித்த சில்லரைச் செலவின ஊழியர்களுக்கும் தற்செயல் விடுப்பு வழங்கப்படும் – (அரசாணை எண் 1180, நிர்வாகத்துறை நாள், 15.12.1986)

6) சமீபத்தில் ஓய்வு பெற இருப்பவர்களுக்கு பணிக்காலத்தைக் கணக்கிடாமல் தற்செயல் விடுப்பு வழங்கலாம். உதாரணமாக ஜனவரியில் ஓய்வு பெறும் ஒருவருக்கு அந்த ஆண்டுக்குரிய 12 நாள் தற்செயல் விடுப்பு வழங்கலாம் – (அரசு க.எண். 61559/82–4, நிர்வாகத் துறை, நாள் 17.1.1983.)

7) இரவு காவலர்களுக்கு சுழற்சி முறையில் விடுப்பு வழங்கலாம் – (அரசு க.எண். 22402/பணி எண் 93–1, நிர்வாகத்துறை, நாள் 4.5.93)

## 2.மதச்சார்பு விடுப்பு

கீழ்க்காணும் பண்டிகை நாட்களில் ஆண்டுக்கு மூன்று நாட்கள் வரையறுக்கப்பட்ட விடுப்பு எடுத்துக்கொள்ளலாம். (அ.ஆ.எண் 210, ப (ம) நி.சீ.து., நாள். 25.3.88 மற்றும் அரசு கடித எண் 118727/எப்ஆர்.III/88–1, நாள் 6.12.89) (அ.ஆ.எண் 428, ப(ம) நி.சீ.து., நாள் 16.12.2003) (அரசு ஆணை எண் (24) 3/ப(ம) நி.சீ. துறை, நாள் 12.1.06) (அ.ஆ. எண் 77, ப.நி.சீ.து (F.R.III நாள். 17.6.2005),(அ.ஆ. எண் 135, ப.நி.சீ.து (F.R. III. நாள் 29.5.2007)

1) சித்ரா பவுர்ணமி
2) ஆடிப்பெருக்கு
3) ரிக் உபகர்மா
4) யஜுர் உபகர்மா
5) காயத்ரி ஜெபம்
6) சாமஉபகர்மா
7) தீபாவளி நோன்பு
8) கார்த்திகை தீபம்
9) வைகுண்ட ஏகாதசி
10) ஆருத்ரா தரிசனம்
11) தைப்பூசம்
12) போகி
13) மாசிமகம்
14) மகா சிவராத்ரி
15) ஷாபே பாரத்
16) ஷாபே காதேர்
17) ஹிஜ்ரோ – புதுவருடம்
18) அப்துல் காதேரின் கார்வின்
19) மாண்டி வியாழக்கிழமை
20) ஆஷ் புதன்கிழமை
21) ஆஷ் ஷோல்ஸ் டே
22) கிருத்துமஸுக்கு முதல்நாள்
23) புதுவருடத்திற்கு முதல் நாள்
24) வரலஷ்மி விரதம்
25) ஓணம்
26) ஸ்ரீ குருநானக் தேவிஜிஸ் பிறந்தநாள்
27) ஷாபே மிரவஜ்
28) ஆர்பா
29) ஈஸ்டர்
30) டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள்
31) புத்த ஜெயந்தி

* வேற்று மதத்தைச் சார்ந்தவர்களும், மத பாகுபாடின்றி இவ்விடுப்பை துய்க்கலாம்.

* தற்காலிகப் பணியாளகளுக்கு மதச்சார்பு விடுப்பு கிடையாது

## 3.தாமத வருகை மற்றும் அனுமதி

1) அனுமதியுடன் ஒருவர் மாதத்தில் மூன்று முறை தாமதமாக வருவாராயின் அரை நாள் தற்செயல் விடுப்பு கழியும். அனுமதியின்றி மூன்று முறை தாமதமாக வருவாராயின், ஒருநாள் தற்செயல் விடுப்பு கழியும் – (அ.ஆ. எண் 414, நிர்வாகத் துறை, நாள் 17.7.89.

2) பொதுவாக ஒருவர் அனுமதியுடன் இரண்டு முறையும், அனுமதியின்றி இரண்டு முறையும் தாமதமாக வரலாம் – (மேற்படி அரசாணை)

3) தற்செயல் விடுப்பு இல்லாவிடில் ஈட்டிய விடுப்பிலிருந்தோ ஈடு செய் விடுப்பிலிருந்தோ கழிக்கப்படும் – (அ.ஆ.எண். 130, நிர்வாகத்துறை, நாள் 10.4.91)

4) மதச்சார்பு விடுப்பிலிருந்து கழிக்கக்கூடாது – (அரசு க.எண்.24686/அ.வி.iii/பணியாளர் துறை, நாள். 4.4.89)

5) எவ்வித விடுப்பும் இருப்பில் இல்லாவிடில் எதிர் காலத்தில் திரளக்கூடிய ஈட்டிய விடுப்பிலிருந்து கழிக்கலாம். – (அரசாணை எண் 130, நிர்வாகத் துறை நாள் 10.4.91)

6) அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண் அரசு ஊழியர்கள் ஒரு மாதத்தில் மூன்று வெள்ளிக்கிழமை நாட்களில் காலையில் ஒரு மணி நேரம் தாமதமாக வர அனுமதியுண்டு. இந்த சலுகை நேரடியாக பொது மக்களுக்கு சேவை செய்து வரும் மருத்துவமனை, பள்ளிகள், கல்லூரிகள், காவல் நிலையங்கள் போன்றவற்றில் வேலைசெய்யும் பெண் அரசு ஊழியர்களுக்கு கிடையாது. (அ.ஆ.எண். 393, நிர்வாக சீர்திருத்தத் துறை , நாள் 29.12.95)

## 4.பண்டிகைகளுக்கான சிறப்பு அனுமதி

கீழ்க்காணும் பண்டிகைகளுக்கு அலுவலகத்தை விட்டு 1½ மணி நேரம் முன்னதாகச் செல்லவோ, காலையில் 1½ மணி நேரம் தாமதமாக வரவோ அனுமதிக்கப்பட்டுள்ளது. (அ.ஆ.எண் 470 பல்வகை (பொது.எம்.) துறை நாள். 3.3.67)

***இந்துக்கள்***

1. கார்த்திகை தீபம்
2. சந்திர கிரகணம்
3. சூரிய கிரகணம்
4. அறுபத்தி மூவர் விழா (மைலாப்பூர்)
5. தீபாவளி முதல் நாள்
6. காயத்ரி ஜபம்
7. மாசி மகம்
8. ஸ்ரீ ராம நவமி

***முஸ்லீம்கள்***

9. ரம்ஜான் முதல் நாள்
10. பக்ரித்துக்கு முந்தையநாள்

***கிருத்துவர்கள்***

11. ஆஷ் புதன்கிழமை
12. மாண்டி வியாழக்கிழமை
13. கிறிஸ்துமஸுக்கு முதல் நாள்
14. ஈஸ்டருக்கு முந்தைய நாள்
15. டிசம்பர் 31
16. ஆல் ஷோல்ஸ் டே

அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே, அந்தந்த பண்டிகைகளுக்கான அனுமதியை துய்க்கலாம். (அரசு கடித எண் 118707எப்.ஆர்(ii)/88 நாள் 6.12.89)

## 5. சிறப்பு தற்செயல் விடுப்பு

### *(அ). குடும்ப கட்டுப்பாட்டுக்கான சிறப்பு தற்செயல் விடுப்பு:*

1) அரசு ஊழியர் ஒருவரின் மனைவி குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்ட நாளிலிருந்து, அரசு ஊழியருக்கு மருத்துவச் சான்றின்பேரில் 7 நாள் இவ்விடுப்பு வழங்கப்படும். முதல் அறுவை சிகிச்சை பயன் அளிக்காதபோது, மனைவி இரண்டாவது அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும் 7 நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கலாம்– (அரசு ஆணை எண் 470, நிர்வாகத்துறை, நாள் 14.11.90)

2) சில்லரை செலவின பணியாளருக்கும் இவ்விடுப்பு வழங்கலாம் – (அ.ஆ.எண் 1452, நல்வாழ்வுத்துறை, நாள் 14.7.1982)

3) இந்த விடுப்புடன் அரசு விடுமுறை அல்லது பிற விடுப்புகளையும் சேர்த்து எடுக்கலாம். இந்த விடுப்புகளை சாதாரணமாக விடுப்பு வழங்கும் அலுவலரே வழங்கலாம்– (அ.ஆ. எண். 356, நல்வாழ்வுத்துறை, நாள் 22.2.1982)

4) திருமணமாகாத அல்லது இரண்டு குழந்தைகளுக்கும் குறைவாக உள்ளவர் Recanalisation Operation செய்து கொண்டால், மருத்துவச் சான்றின் பேரில் 21 நாட்கள் விடுப்பு வழங்கலாம். (அரசு விடுமுறையும் சேர்த்து மொத்தத்தில்) இந்த விடுப்பை பிற விடுப்புகளுடன் சேர்த்தும் எடுக்கலாம். – (அரசாணை எண் 2323, நல்வாழ்வுத்துறை, நாள் 28.12.1981)

5) ஆண் அரசு ஊழியர் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டால் 8 நாட்கள் விடுப்பு மட்டுமே வழங்கப்படும். – (அடிப்படை விதி இணைப்பு 7ன் விதி (ii) உள்ள துணை விதி 7(ஏ)ன் கீழ்).

6) பெண் அரசு ஊழியர் Non-Puerperal Sterilisation அறுவை சிச்சை செய்து கொண்டால் 20 நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கலாம். பேறு காலத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் சிறப்பு தற்செயல் விடுப்பு கிடையாது – (மேற்படி விதி).

7) தற்காலிகப் பணியில் உள்ள திருமணமான பெண் ஊழியர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அவருக்கு 20 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும். – (அ.ஆ. எண்.299, நல்வாழ்வுத்துறை, நாள் 10.3.1982)

8) சில நேரங்களில் அறுவை சிகிச்சை காரணமாக மேற்படி விடுப்புக்கும் அதிகமாக சிறப்பு விடுப்பு தேவைப்பட்டால் மருத்துவ அலுவலரின் சான்றின் பேரில் அதிகமான விடுப்பு வழங்கப்படும்–(அ.ஆ. எண் 644, நல்வாழ்வுத்துறை, நாள் 25.3.1982)

9) சாதாரணமாக விடுப்பு வழங்கும் அலுவலரே இந்த விடுப்பை வழங்கலாம் (அ.ஆ. எண் 356, நல்வாழ்வுத்துறை, நாள் 22.2.1982)

### *(ஆ) தொற்று நோய்க்கு சிறப்பு தற்செயல் விடுப்பு:*

1) ‘ராபிஸ்’ நோய் குடும்பத்தில் எவருக்கேனும் கண்டிருந்தாலும், அரசு ஊழியருக்கு மருத்துவச் சான்றின்பேரில் 21 நாட்கள் விடுப்பு வழங்கப்படும். (அடிப்படை விதி இணைப்பு VII –ன் பிற்சேர்க்கை 1 துணை விதி 7(a)

(Measles, Chicken Pox, Plague, Cholera, Typhoid, Acute Influenza Pneumonia, Diphtheria, and Cerebra spinal Meningitis) (G.O Ms No 264 Health and Family Welfare Department Dt 03.06.97)

2) இந்த வியாதிகள் அரசு ஊழியருக்கே கண்டிருப்பின் அவர் U.E.L on M.C. அல்லது தகுதியுள்ள பிற விடுப்புகளை அனுபவிக்கலாம்.

### *(இ) விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க சிறப்பு தற்செயல் விடுப்பு:*

(அ.ஆ.எண் 1755, கல்வித் துறை,நாள் 28.11.1988)

1) தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவருக்கு கீழ்கண்டவாறு சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும்

(i) மேற்படி போட்டிகளில் கலந்திட தேர்வு பெற்றவர்களுக்கும், அதற்கான பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல வேண்டியவர்களுக்கும் பயணக்காலம் உட்பட அனைத்தும் பணிக்காலமாக கருதப்படும்.

(ii) மேற்படி விளையாட்டுக்கான போட்டிகளில் கலந்து கொள்ள 30 நாட்கள் வரை இவ்விடுப்பு கிடைக்கும்.

2) இந்த விடுப்பைப் பிற விடுப்புகளுடன் சேர்த்தும் எடுக்கலாம்.

3) தனிப்பட்ட முறையில் போட்டிகளில் கலந்து கொள்பவருக்கு இவ்விடுப்பு கிடைக்காது (மேற்படி விதி)

## 6. ஈடு செய் விடுப்பு

1) அரசு விடுமுறைகளில் பணிபுரிவதற்கு, ஈடாக வேறு நாளில் எடுத்துக்கொள்ள வழங்கப்படும் விடுப்பே ஈடு செய் விடுப்பாகும். ஒரு ஆண்டுக்கு 20 நாட்கள் இவ்விடுப்பு வழங்கப்படும். இட மாற்றலில், புதிய இடத்திலும் , இவ்விடுப்பை எடுக்கலாம். இவ்விடுப்பினை ஆறு மாதங்களுக்குள் துய்க்காவிடில் காலாவதியாகிவிடும். (அ.ஆ.எண் 2218, பொதுத்துறை, நாள் 14.12.1981.)

2) இந்த விடுப்பைத் தற்செயல் விடுப்பு மற்றம் அரசு விடுமுறை ஆகியவற்றுடன் சேர்த்து 10 நாட்களுக்கு மிகாமல் எடுக்கலாம்.

3) ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்புடன் சேர்த்தும் எடுக்கலாம். (அடிப்படை விதி 68ன் கீழ் உள்ள குறிப்பு).

4) முழுநேரக் காவலர்களுக்கு அரசு விடுமுறை நாட்களில் பணிபுரிவதற்காக ஈடு செய் விடுப்பு வழங்கலாம். (அரசு க.எண் 22402/பணி–எப் 93–1/நிர்வாகத்துறை, நாள் 4.5.93)

5) தேவையின்றி அரசு ஊழியரை விடுமுறைப்பணி புரிய நிர்ப்பந்திக்கக் கூடாது. (அ.ஆ. எண். 186, நிர்வாகத்துறை, நாள் 15.6.93)

6) 6 மாதத்திற்கு 10 நாட்கள் என்ற உச்ச வரம்பு இல்லை. தகுதியான நாட்களை முழுமையாக துய்க்கலாம்.

## 7.. மகப்பேறு விடுப்பு

(இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் தான்)
(அரசாணை எண் 237, நிர்வாகத்துறை, நாள் 29.6.93)

1) தகுதிகாண் பருவம் முடித்த திருமணமான பெண் ஊழியருக்கு 90 நாட்களுக்கு அதிகமாகாமல் மகப்பேறுக்கு முன்னரும், பின்னரும் (அரசு கடிதம் எண் 41615/FR III/95–1, P&R, dt. 13.10.95) மருத்துவரின் அறிவுரைப்படி விடுப்பு அளிக்கலாம்.

2) மகப்பேறு விடுப்பைத் தொடர்ந்து எடுக்கும் பிற விடுப்புக்கும் மருத்துவச்சான்று தேவை.

3) பிற விடுப்புகளில் இருக்கும்பொழுது குழந்தை பிறந்தால், குழந்தை பிறந்த நாளிலிருந்து 90 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படும்.

4) தகுதிகாண் பருவத்தினராக இருந்தால் ஓராண்டு காலம் முடிப்பதற்கு முன்னரே இவ்விடுப்பு வழங்கலாம். ஆனால், அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்புப் போக மீதமுள்ள விடுப்பை மகப்பேறு விடுப்பாக வழங்கப்படும். (அரசு க.எண். 44189/82–13, நிர்வாகம், நாள் 16.12.1983.)

5) தற்காலிகப் பணியாளராக இருப்பின், ஓராண்டு பணி முடிக்க வேண்டும். அதுவும் அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு போக மீதி உள்ள காலத்திற்கு மட்டுமே மகப்பேறு விடுப்பு வழங்கப்படும்.

6) 29.3.93 முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் இநத் விடுப்பு கிடைக்கும். உயிருடன் இரண்டு குழந்தைகள் இருந்தாலும், மூன்றாவது குழந்தைக்கும் விடுப்பு கிடைக்காது. – (அ.ஆ. எண் 237, நிர்வாகத்துறை, நாள் 29.6.93).

7) மகப்பேறு விடுப்பிலிருந்து திரும்பும் ஊழியரை முடிந்தவரை அதே இடத்தில் பணி அமர்வு செய்ய வேண்டும். – (அரசு க.எண். 22901/93–1, நிர்வாகத்துறை, நாள் 18.6.93)

### *கருச்சிதைவு அல்லது கரு நீக்குதலுக்கான விடுப்பு:*

1. ஒருவருக்கு கருவுற்ற 12 வாரங்களுக்குப் பின்னரும் 20 வாரங்களுக்கு முன்னரும் கருச்சிதைவு ஏற்பட்டால், இவ்விடுப்பு வழங்கப்படும். தானே முன்வந்து அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் கருச்சிதைவு செய்து கொண்டாலும், இவ்விடுப்பு வழங்கப்படும். இயற்கை அபார்ஷன், மிஸ்கேரியேஜ் ஆகியவைகளுக்கும் 6 வாரங்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கலாம்.

2. 29.6.93 முதல் இதற்கு 42 நாட்கள் விடுப்பு வழங்கப்படும். தற்காலிகப் பணியில் உள்ளவர் ஓராண்டு பணி முடித்திருக்கவேண்டும். இவர்களுக்கு இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பு போக மீதி உள்ள விடுப்பு (42 நாட்களுக்குட்பட்டு) மகப்பேறு விடுப்பாக வழங்கப்படும்.

3. இந்த விடுப்புக்கு வரையறை கிடையாது. எத்தனை குழந்தைகள் இருப்பினும் விடுப்பு வழங்கலாம்–(அரசாணை எண் 237, நிர்வாகத்துறை, நாள் 29.6.93). குடும்ப கட்டுப்பாட்டு ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை இல்லை.

## *தத்து எடுத்துக்கொள்வதற்கு மகப்பேறு விடுப்பு*

தத்து எடுத்துக்கொள்ள விரும்பும் பெண் அரசு ஊழியருக்கு குழந்தையின் வயதினை பொறுத்து கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு வருட காலம் அளவிற்கு அனுமதிக்கலாம்.

1. தத்து எடுத்துக்கொள்ள விரும்பும் அரசு ஊழியருக்கு உயிருடன் உள்ள ஒரு குழந்தை மட்டும் இருக்க வேண்டும்.

2. தத்து எடுத்துக்கொள்ளப்படும் குழந்தையின் வயது, ஒரு மாதத்திற்குள் இருப்பின், ஒரு வருட விடுப்பும், ஒரு மாதம் முடிந்த குழந்தையாக இருப்பின், 11 மாத விடுப்பும், இரண்டு மாதம் முடிந்த குழந்தையாக இருப்பின் 10 மாத விடுப்பும் அளிக்கலாம். (அ.ஆ. எண் 342, சமூக நலத்துறை, நாள் 8.12.95)

## 8.ஈட்டிய விடுப்பு

(அரசாணை எண் 157, **P&A.R. dt.** 24.6.94)

(அ) 1.7.94 முதல் விடுப்பு முற்றிலுமாக மைய அரசு ஊழியருக்கு வழங்கப்படுவது போன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதன்படி ஜனவரி 1 மற்றும் ஜுலை 1, ஆகிய தேதிகளில் அரசு ஊழியருக்கு முறையே 15 நாட்கள் ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்கப்படும்

(இ) 30.6.94 அன்று ஒருவரின் ஈட்டிய விடுப்புக் கணக்கு முடிக்கப்படும். 1.7.94 அன்று 15 நாட்கள் அதனுடன் சேர்க்கப்படும். மொத்தம் 240 நாட்களுக்கு அதிகமாகக்கூடாது.

(ஈ) ஒரு அரை ஆண்டின் இடையில் புதியதாக பணி ஏற்கின்ற முறையான ஊழியருக்கு ஒரு மாதத்திற்கு 2½ நாள் என்ற அளவில் அவரின் கணக்கில் இருப்பு வைக்கப்படும்.

(உ) அரை ஆண்டின் இடையில் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற அல்லது விலகும் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 2½ என்ற அளவில் ஈட்டிய விடுப்புக் குறைக்கப்படும். இதே போன்று பணிக்காலத்தில் இறப்பவர்களுக்கும் பணியிலிருந்து நீக்கப்படுபவர்களுக்கும் ஈட்டிய விடுப்பு குறைக்கப்படும்.

(ஊ) ஒரு அரையாண்டில் ஈட்டிய விடுப்பில் சேர்த்த பின்னர் ஒருவர் ஊதியமில்லா விடுப்பு அனுபவிக்க நேருமாயின் (L.L.P. with or without M.C) 10 நாள் L.L.Pக்கு ஒரு நாள் என்ற அளவில் இவ்விடுப்பு குறைக்கப்படும்.

(எ) பின்னமாக வரும் ஈட்டிய விடுப்பு முழு நாளாக கணக்கிடப்படும்

(ஏ)தற்காலிகப் பணியாளர்கள் விஷயத்தில் ஒரு அரையாண்டில் அவர்கள் பணிபுரியக்கூடிய ஒவ்வொரு இரண்டு முழு மாதத்திற்கும் மொத்த இருப்பு 30 நாட்களுக்கு அதிகமாகக்கூடாது.

(ஐ) கடைநிலை ஊழியருக்கு மேலே (ஏ) ல் குறிப்பிட்டபடி ஈட்டிய விடுப்பு இருப்புவைக்கப்படும். பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்தபின்னர், அரை ஆண்டின் துவக்கத்திலேயே 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு இவர்கள் கணக்கில் இருப்பு வைக்கப்படும்.

(ஒ) ஒரு அரை ஆண்டின் முதலில் ஒருவர் விடுப்பில் இருக்க நேரிட்டால், அவர் மீண்டும் பணி ஏற்பார் என்று திட்டவட்டமாகத் தெரிந்தால்தான் அவர்களுக்கு 15 நாட்கள் இருப்பு வைக்கப்படும்.

(ஓ) ஒரு ஆண்டு துவக்கத்தில் 226 முதல் 240 ஈட்டிய விடுப்பு இருப்பு இருக்கும் பட்சத்தில், அவருக்கு அரைஆண்டு துவக்கத்தில் இருப்பு வைக்கப்படும் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு தனியாக இருப்பு வைக்கப்படும். அந்த அரை ஆண்டில் அனுபவிக்கும் ஈட்டிய விடுப்பு மற்றும் சரண் விடுப்பு போக மீதம் உள்ள விடுப்பு, அரை ஆண்டின் இறுதியில் பழைய இருப்பில் சேர்க்கப்படும். அதன் மொத்தம் 240 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.

## 9. சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

### *(Unearned Leave on Private Affairs) T.N.L.R. 13 and 14)*

(1) தகுதியான விடுப்பு

***உயர்நிலைப்பணி:***

10 a (1) மற்றும் தகுதிகாண் பருவத்தினருக்கு இவ்விடுப்பு கிடைக்காது

0–10 வருடப் பணிக்கு 90 நாட்கள் கிடைக்கும்.

10 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு 180 நாட்கள்

***அடிப்படை பணி:***

முறைப்படுத்திய தேதியிலிருந்து 15 வருடங்கள் பணி முடித்திருந்தால், உயர்நிலைப்பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதே அளவில் இந்த விடுப்பு வழுங்கலாம்.

(2) விடுப்பு முடிந்து மீண்டும் பணி ஏற்பார் என்ற உறுதியின் அடிப்படையில் இந்த விடுப்பு வழங்கப்படும்.

(3) ஒரே நேரத்தில் மூன்று மாதம் எடுக்கலாம். ஈட்டிய விடுப்புடன் சேர்த்து எடுத்தால் ஆறு மாதங்களுக்கு அதிகமாகக் கூடாது. இவ்விடுப்பு நாள் கணக்கில் தான் வழங்கப்படவேண்டும்.

(4) ஒவ்வொரு விடுப்புக்குமுள்ள நிபந்தனைக்குட்பட்டு இவ்விடுப்பினை பிற விடுப்புடன் இணைத்து எடுக்கலாம்.

## 10 .ஊதியமில்லா விடுப்பு

**(F.R.85(a))**

மற்ற விடுப்புகள் ஏதும் வழங்க இயலாத நிலையில் அல்லது ஊழியர் விரும்பிக்கேட்டால், இந்த விடுப்பு வழங்கப்படும். இந்த விடுப்பிற்கு ஊதியம் கிடையாது. இந்த விடுப்பை பிற விடுப்புடன் சேர்த்தும் எடுக்கலாம்.

மருத்துவச் சான்றின்பேரில் 60 நாட்களுக்கு மேல் இந்த விடுப்பு எடுத்தால், மருத்துவக் குழுவிற்கு அனுப்பப்படவேண்டும். – (அரசு க.எண். 695481/82–1, நிர்வாகத்துறை, நாள் 13.9.1982)

மருத்துவச் சான்றின் பேரில் ஊதியமில்லா விடுப்பு எடுத்தால் இந்த விடுப்புக் காலம் ஓய்வூதியம் மற்றும் ஊதிய உயர்வுக்கு கணக்கில் சேரும் –(அடிப்படை விதி 26(bb)).

## 11. Hospital Leave **(Instruction 2 under F.R. 101 (a)**

அபாயகரமான இயந்திரங்கள், வெடி மருந்துகள், பிற மருந்துகள் அல்லது மிகவும் ஆபத்தான பணிகளில் ஈடுபடுவோருக்கு இவ்விடுப்பு வழங்கப்படும்.

## 12. மருத்துவ விடுப்பு *T.N.L.R. 15 & 15-A*

*(Un earned Leave on Medical Certificate)*

**(1) தகுதியான விடுப்பு**

***உயர்நிலைப்பணி***

10(a) (1) மற்றும் 2 வருடம் பணி முடிக்காத தகுதிகாண் பருவத்தினருக்கு இவ்விடுப்பு கிடைக்காது. (த.நா.வி.விதி 23 உப விதி 2).

உயர்நிலைப்பணி

| | | |
|---|---|---|
| தகுதிகாண் பருவத்தினர் | 0–2 வருடம்<br>2–5 வருடம்<br>5–10வருடம் | இல்லை<br>90 நாட்கள்<br>180 நாட்கள் |
| தகுதிகாண் பருவம் முடிக்கப் பட்டவர்/நிரந்தரமாக்கப்பட்டவர் | 2–5வருடம் வரை<br>5–10வருடம் வரை<br>10–15வருடம் வரை<br>15–20 வருடம் வரை<br>20 வருடத்திற்கு மேல் | 90 நாட்கள்<br>180 நாட்கள்<br>270 நாட்கள்<br>30 நாட்கள்<br>540 நாட்கள் |

***அடிப்படைப் பணி***

| | |
|---|---|
| தற்காலிகம் | இல்லை |
| தகுதிகாண் பருவத்தினர் முறைப்படுத்திய நாளிலிருந்து 15 ஆண்டுகள் முடித்திருந்தால் | ஓர் ஆண்டிற்கு 10 நாட்கள் வீதம் உயர்நிலைப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதே அளவில் இவ்விடுப்பு எடுக்கலாம். |

(2) இந்த விடுப்பில் நாள் கணக்கில் தான் வழங்கப்படவேண்டும்

(3) எந்த நோய்க்காகவும் இந்த விடுப்பு வழங்கலாம்

(4) சாதாரணமாக ஒருவர் பணிக்காலத்தைக் கணக்கிட்டுத்தான் இந்தவிடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால் காசநோய், புற்றுநோய் மற்றும் தொழு நோயாளிகளுக்கு ஒரே நேரத்தில் 18 மாத விடுப்பும் வழங்கலாம் (T.N.L.R. 15;15A 23(A) 23(a) (i) and Ruling 92) under T.N.L.R. 23-D) இருதய சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்றம், கண்ணில் உள்ள Retina மாற்றம் ஆகியவற்றுக்காக சிகிச்சை பெறுபவருக்கும் பணிக்காலத்தை கணக்கிடாமல் இவ்விடுப்பு வழங்கலாம். (அ.ஆ.எண். 5, நிர்வாகத் துறை, நாள் 10.10.1988)

(5) A.M.A./R.M.P. ஆகியவர்கள் இவ்விடுப்புக்கு மருத்துவச் சான்று வழங்கலாம். (Annexure to F.R.)

(6) H.P.I.M/C.G.I.M./B.I.M., ஆகிய தகுதியுள்ளவர்களுக்கு இந்த விடுப்பிற்கு மருத்துவச் சான்று வழங்கலாம். (G.O.Ms.No. 816, P & A.R., dt. 31.7.81).

(7) அரசு மருத்துவமனையில் பணிபுரியும் ஓமியோபதி மருத்துவம் பார்ப்பவர்களும் இந்த விடுப்புக்கு சான்று வழங்கலாம் (G.O.Ms.No. 235, Health, dt. 10.12.81).

(8) மருத்துவ சான்றிதழில் குறிப்பிட்ட தேதியிலிருந்துதான், ஈட்டா விடுப்பு துவங்கும், மருத்துவ விடுப்பு முடிந்து,தகுதிச் சான்றிதழ் எந்ததேதியில் வழங்கப்படுகிறதோ அந்த தேதியோடு மருத்துவ விடுப்பு முடிவடைகிறது. மருத்துவர் எந்த தேதியில் விடுப்பு முடிவதாக சான்று தருகிறாரோ, அந்த தேதி அரசு விடுமுறையானால் அந்த தேதியின் விடுப்பினை பின் இணைப்பு செய்து கொண்டதாக கருதலாம். இந்த உத்திரவு 30.5.94 முதல்அமுலாகும் (அரசு கடிதம் எண். 64335 FRV/94.5, நாள் 27.3.95).

## மருத்துவக் குழுவிற்கு அனுப்புதல்

(1) ஒரே நேரத்தில் 60 நாட்களுக்கு அதிகமாக (60 நாட்கள் அல்ல) மருத்துவ விடுப்பு எடுத்தாலும், இடமாற்றல் ஆணை பெற்றவுடன் மருத்துவ விடுப்பு எடுத்தாலும் அல்லதுஅடிக்கடி மருத்துவ விடுப்பு எடுத்தாலும், 60 நாட்களுக்கு அதிகமாக L.L.P. on MC எடுத்தாலும் மருத்துவக் குழுவின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டும் (G.O.Ms.No. 816, P & A.R., dt. 21.4.78 மற்றும் அரசு கடித எண். 16213/ஏ/அ.வி./111/87-10 P & A.R., dt. 26.2.88) தொடர்ச்சியாக அல்லாமல் இடையிடையே விடுப்பு அனுபவித்தாலும், மொத்த மருத்துவ விடுப்பு நாட்கள் 60 நாட்களுக்கு அதிகமானால் மருத்துக் குழுவிற்கு அனுப்பவேண்டும் (Govt. Lr.No. 48445/F.R.V/95-1, P & A.R., dt. 19.7.95).

(2) மருத்துவ விடுப்பில் சென்று ஏழு நாட்களுக்குள் மருத்துவச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். மருத்துவக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இருப்பின், விண்ணப்பம் கிடைத்த மூன்று நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

(3) ஒரே நேரத்தில் மருத்துவ விடுப்பு எடுக்காமல் பிற விடுப்புகளுடன் சேர்த்து எடுக்கும் மருத்துவ விடுப்போ அல்லது மருத்துவச் சான்றின் பேரிலான L.L.P.யோ 60 நாட்களுக்கு அதிகமானாலும் மருத்துவக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

(4) காச நோயாளிகள், தொழுநோயாளிகள் மற்றும் புற்று நோயாளிகளை மருத்துவக் குழுவின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டியதில்லை. சம்பந்தப்பட்ட உதவி மருத்துவரின் சான்று மட்டுமே போதுமானது (Govt. Lr.No. 195778/76-77/P & A.R., dt. 3.1.78).Coronory Surery,Kidney Transplantations மற்றும் Retina Transplantation ஆகிய நோய்களுக்கு ஊழியர் சிகிச்சை பெறும் மருத்துவமனையின் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிசான்று வாங்கினால் போதுமானது. (அ.ஆ.எண். 527, P & A.R., dt. 10.10.88)

(5) அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உள்நோயாளிகள் விஷயத்தில் மருத்துவமனைக் கண்காணிப்பாளரின் சான்றே போதுமானது. (G.O.Ms.No.727/P & A.R., dt. 12.8.70 மற்றும் அரசு ஆணை எண். 293, நிர்வாகத் துறை, நாள் 18.5.89).

(6) மருத்துவமனையினின்று விடுபட்டதைத் தொடர்ந்து விடுப்புத்தேவைப்படின், மருத்துவமனை வார்டின் உதவி மருத்துவர் சான்றுஅளித்தால் போதும். (Govt. Lr.No. 12087/82-4/P & A.R., dt. 12.5.82)

(7) தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக இருப்பவர் 60 நாட்களுக்கு அதிகமாக விடுப்பு எடுத்தால், அவரை அருகில் உள்ள மருத்துவக்குழுவிற்கு அனுப்பி கருத்துரை பெற வேண்டும். இதற்காக ஆம்புலன்ஸ் கட்டணம் செலுத்தியிருந்தால் ஊழியர் திரும்பப் பெறலாம். (G.O.Ms.No.307/P & A.R., dt. 24.3.86, G.O.Ms.No.293/ P & A.R., dt. 18.5.89).

(8) மருத்துவ நிதி உதவி திட்டத்தின் கீழ், தனியார் மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை பெறுபவர் இரண்டு மாதங்களுக்கு மேல் மருத்துவ விடுப்பு கோரினால் மருத்துவ குழு பரிந்துரை இல்லாமல் மருத்துவ விடுப்பு வழங்கலாம். (அரசு ஆணை எண். 148, ப(ம)நிசீ. துறை, நாள் 14.9.06).

## 13. Special Disability Leave (அடிப்படை விதி 83 83A)

அரசுப் பணிகள் மேற்கொள்கையில் விபத்துக்குள்ளாகின்றவர்களுக்கு அதிகபட்சமாக 24 மாதங்களுக்கு இவ்விடுப்பு வழங்கப்படும். விபத்து நடந்து முடிந்த சில நாள் கழித்து உடலில் ஊனம் ஏற்பட்டாலும் அல்லது மீண்டும் ஊனம் ஏற்பட்டாலும் மருத்துவக் குழுவின் பரிந்துரையின் பேரில் இவ்விடுப்பு வழங்கப்படும். துறைத் தலைவரால்தான் இவ்விடுப்பு வழங்க இயலும்.

## 14. உயர் கல்விக்கான விடுப்பு
## *(F.R. 84 and Rules in Annexure in Appendix II)*

(1) ஐந்து ஆண்டு பணி முடிந்த அரசு ஊழியருக்கு இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பக் கல்வி கற்க இந்த விடுப்பு வழங்கப்படும். இவ்விடுப்பு பிற விடுப்புகளுடன் சேர்ந்து, மொத்தத்தில் 24 மாதங்களுக்கு அதிகமாகாமல் எடுக்கலாம்.இவ்விடுப்பு, ஓய்வூதியம், ஊதிய உயர்வு, பதவி உயர்வு ஆகிய அனைத்திற்கும் கணக்கிடப்படும். இதுகுறித்து அரசு ஒட்டுமொத்தமாக G.O.Ms.No.145/P & A.R., dt. 14.3.96ல் அறிவுரைகள் வழங்கியுள்ளது.

(2) அரசு செலவில் பயிற்சிக்கு அனுப்பப்படும் அலுவலர்கள் பத்திரம் எழுதித் தர வேண்டும் பத்திரம். (G.O.Ms.No.145/P & A.R., dt. 14.3.96)

## 15. ஒப்புவிப்பு விடுப்பு ( **Surrender Leave**)

(1) ஊதியமில்லா விடுப்பு, சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலம் போன்றவை தவிர பிற காலங்களில் பணம் பெறும் பொருட்டு, ஈட்டிய விடுப்பை, ஊழியர் ஒருவர் ஒப்புவிப்புச் செய்யலாம் (G.O.Ms.No.1089/P & A.R., dt. 1.11.80).

(2) 24 மாத இடைவெளியில் 30 நாள் வரையும், 12 மாத இடைவெளியில் 15 நாள் வரையும் (அதற்குக் குறைவாகவும்) ஈட்டிய விடுப்பை ஒப்புவிக்கலாம்.

(3) விடுப்பை ஒப்படைக்கும் நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ விண்ணப்பம் கொடுக்கலாம். பின்னர் கொடுக்கப்படும் விண்ணப்பம், விடுப்பு ஒப்படைக்கும் நாளுக்கு ஒரு மாதத்திற்குள் இருக்க வேண்டும். விடுப்பு ஊதியத்துடன், மலைவாழ்படி, நகர ஈட்டுப்படி மற்றும் வாடகைப்படியும் கிடைக்கும். 1/30 என்ற வீதத்தில் விடுப்பு ஊதியம் இருக்கும்–(அரசு ஆணை எண். 200, நிதி, நாள் 1.4.81) (G.O.Ms.No.43/Fin., dt. 16.7.82) இக்காலத்திற்கு மருத்துவப்படி கிடைக்காது. (அரசு கடித எண். 107557/படிகள்/89.2 நிர்வாகத்துறை, நாள் 8.1.1991). இடைக்கால நிவாரணம் கிடைக்காது. (அரசு கடித எண். 28968/பிசி/94–நிதி, நாள் 3.5.94).

(4) அரசுக்குச் சொந்தமான குடியிருப்பில், வாடகையுடன் இருப்பவருக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கலாம். ஆனால் வாடகையில்லா குடியிருப்பில் இருப்பவருக்கு வீட்டு வாடகைப்படி கிடைக்காது (G.O.Ms.No.200. Fin., dt. 1.4.81 (G.O.Ms.No.777, Fin., dt. 7.9.83 and Govt Lr.No. 33853/II/84-1. Fin., dated 18.8.84).

(5) தற்காலிகப் பணிநீக்கத்திலிருப்பவர், அக்காலம் பணிக்காலமாக கருதப்பட்டு மீண்டும் பணி ஏற்றால், தற்காலிக பணி நீக்கக் காலத்திற்கு அவருக்கு திரண்டுள்ள ஒப்புவிப்பு விடுப்பை பெறதகுதி உண்டு. இதற்கான விண்ணப்பத்தை தற்காலிகப் பணி நீக்கம் முடிந்து மீண்டும் பணி ஏற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் தர வேண்டும் (Govt.Lr.No. 38745/82-1. P & A.R., dated 29.5.82 and Govt. Lr.No. 16216/83-1, P&A.R., dated 18.4.83).

(6) தற்காலிகப் பணி நீக்க காலம் சொந்தக் காரணங்களால் ஈட்டா விடுப்பாகவோ அல்லது ஊதியமில்லா விடுப்பாகவோ கருதப்பட்டால் இந்தச் சலுகை கிடைக்காது– (Govt.Lr.No. 92550/82-3. P & A.R., dated 18.1.83).

(7) இந்த சரண் விடுப்பு உரிமை தற்காலிகமாக28.11.01 முதல் 19.10.04 வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (அ.ஆ.எண். 211, பநிசீது (எப்ஆர் iii) நாள் 28.11.01 மற்றும் அரசு ஆணை எண். 138 (பநிசீது துறை) நாள் 22.1.02).

(8) இந்தச் சலுகை பின்னர் பகுதியாக திரும்ப வழங்கப்பட்டு, ஆண்டுக்கு ஏழு நாட்கள் வீதம் வழக்கமான வருடாந்திர சுழற்சியில் ஒப்படைப்பு செய்து ஊதியம் மற்றும் படிகள் 20.10.2004 முதல் பெறலாம் என்று ஆணையிடப்பட்டது (அ.ஆ.எண். 351 (பநிசீது) நாள் 21.1.04).

(9) 8.2.2006 முதல் 15 நாட்கள் சரண்விடுப்பு வருடாந்திர சுழற்சி முறையில் ஒப்படைப்பு செய்து விடுப்பு ஊதியம் பெறலாம் (அ.ஆ.எண். 19, ப(ம) நிசீ துறை FR III நாள் 23.2.2006).

(10) 14.8.2006 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் சரண் விடுப்பு வருடாந்திர சுழற்சி முறையில் ஒப்படைப்பு செய்து விடுப்பு ஊதியம் பெறலாம். (அ.ஆ.எண். 123, ப(ம) நிசீ துறை (FRIII) நாள் 14.8.2006).

## *விடுப்பு ஊதியம்*

(: விடுப்புக் காலத்தில் கீழே குறிப்பிட்டுள்ளபடி விடுப்பூதியம் வழங்கப்படும். (TNLR 28A)

| | |
|---|---|
| (1) ஈட்டிய விடுப்பு | |
| (2) மருத்துவ விடுப்பு | |
| (3) மகப்பேறு விடுப்பு | அடிப்படை ஊதியம் மற்றும் பிற படிகள் |
| (4) சொந்தக் காரணத்திற்கான ஈட்டா விடுப்பு | அடிப்படை உதியத்தில் பாதி:<br>அகவிலைப்படி மற்றும் படிகள் முழுவதுமாக. |
| (5) ஒப்புவிப்பு விடுப்பு (சரண் விடுப்பு) | ஊதியம் மற்றும் படிகள் முழுவதுமாக<br>(மருத்துவப்படி கிடையாது) |
| (6) ஊதியமில்லா விடுப்பு | ஊதியம் கிடையாது |

(2) தொழுநோயாளிகள், புற்று நோயாளிகள் மற்றும் காச நோயாளிகள் அனைத்து விடுப்புகளும் முடிந்த பின்னர் ஊதியமில்லா விடுப்பில் இருக்க நேரிட்டால் இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.250/– கருணைத் தொகையாக வழங்கப்படும். அவர்கள் உள்நோயாளியாக இருந்தால் அதிகமாக இரண்டு ஆண்டுக்கு மட்டுமே இத்தொகை கிடைக்கும். (அரசாணை எண். 539, நிர்வாகத்துறை, நாள் 17.10.1988).

(3) விடுப்பு காலத்தில் விடுப்பில் செல்வதற்கு முன்னர் பெற்று வந்த ஊதியம் மற்றும் படிகள் விடுப்பு ஊதியமாக வழங்கப்படும்– (T.N.L.R. 28A)

(4) வாடகையில்லா குடியிருப்பு (Free Quarters) உள்ளவர் விடுப்புக் காலத்தில் வீட்டைக் காலி செய்தால், காலி செய்த நாள் முதல் அவருக்குத் தகுதியுள்ள வீட்டு வாடகைப்படி கிடைக்கும்–(அரசாணை எண். 490, நிர்வாகத்துறை, நாள் 23.5.1983).

(5) விடுப்புக் காலத்தில் உயர்த்தப்படும் அகவிலைப்படியையும் விடுப்பு ஊதியத்துடன் பெறலாம்– (அ.ஆ.எண். நிதித்துறை, நாள் 29.9.1980).

(6) விடுப்பிலிருப்பவர் வேறு அலுவலகம் மாற்றப்பட்டால், பழைய அலுவலகம் தான் விடுப்பூதியம் வழங்க வேண்டும். புதிய அலுவலகம் பணியிறேபிடைக்கால ஊதியம் மட்டுமே வழங்கும்– (Art 31(3).Account Code, Vol.I)

## *விடுப்பு தொடர்பான பிற விதிகள்*

**1.பணிநீக்கம் செய்யப்பட்டவர் ஈட்டிய விடுப்பை பணமாக்குதல்.**

அரசுத் துறை ஒன்று மூடப்படுவாதாலோ அல்லது அரசின் திட்டம் ஒன்று முடிவு பெறுவதாலோ, பணி நீக்கம் செய்யப்படும் தகுதிகாண் பருவம் முடித்த ஊழியருக்கு இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்புக்கு சரண் விடுப்பைப் போன்று விடுப்பு சம்பளம் வழங்கப்படும். (அரசாணை எண். 315, நிர்வாகத்துறை, நாள் 29.5.1995 மற்றும் அரசாணை எண். 345, நிர்வாகத்துறை, நாள் 31.7.1990).

**2.பணியிலிருக்கும் பொழுது பிற துறைக்குத்தேர்வு செய்யப்பட்டவர் இருப்பில் உள்ள ஈட்டியவிடுப்பை அனுபவித்தல்.**

ஒரு அலுவலகத்தில் பணிபுரிபவர், தேர்வாணையம் அல்லது பிற நியமனங்கள் வாயிலாக வேறு துறைக்கு பணி நியமனம் பெற்றால், அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு போன்ற விடுப்புகளை புதிய அலுவலகங்களிலும் அனுபவிக்கலாம் (அடிப்படை விதி 65ன் துணை விதி (5)).

**3.அதிகபட்சமாக ஒரு ஊழியர் எத்தனை நாள் விடுப்பு அனுபவிக்கலாம்**

(1) ஐந்து ஆண்டு பணி முடிக்காத அரசு ஊழியர் ஒருவர் ஆறுமாதம் வரை தொடர்ந்து விடுப்பில் இருக்கலாம். ஐந்து ஆண்டு பணி முடித்தவர் என்றால் ஓராண்டு வரை தொடர்ந்து விடுப்பில் இருக்கலாம். (அரசாணை எண். 477,நிர்வாகத்துறை, நாள் 21.11.1990).

(2) தவிர்க்க இயலாத காரணங்களினால் விடுப்பு எடுத்தால் மேற்படி வரையறையை அரசு தவிர்க்கலாம்– ((G.O.Ms.No.477, P & A..R., dt. 8.8.91)

(3) ஒரு ஊழியர் மருத்துவம் அல்லது மேற்படி ஆகியவற்றிற்காக ஓராண்டுக்கு மேலும் தொடர்ந்து விடுப்பில் இருக்கலாம்–(மேற்படி அரசாணை).

(4) மேற்கூறியபடி ஆறு மாதம்/ஓராண்டுக்கு அதிகமாக விடுப்பில் இருக்கும் ஒருவரை பணி ஏற்க அனுமதித்துவிட்டு, அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம். (அரசு க.எண். 8699/அ.வி.111/91–5, நிர்வாகத்துறை, நாள் 8.8.1991).

(5) ஆறு மாதம்/ஓராண்டு தொடர் விடுப்பு எடுத்தவர் மீண்டும்ஆறுமாதம்/ஓராண்டு தொடர் விடுப்பு எடுக்க மூன்று ஆண்டு இடைவெளி தேவை. ஆறுமாதம்/ஓராண்டுக்கு அதிகமாகாமல் விடுப்பு எடுத்தவர், மீண்டும் தொடர் விடுப்பு எடுக்க மூன்று ஆண்டு இடைவெளித்தேவையில்லை.

(6) ஓராண்டுஅல்லது ஆறு மாதங்களுக்கு மேல் விடுப்பில் சென்றவர்மீது அடிப்படைவிதி 18(3)க்குப் பதிலாக, தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 8 மற்றும் 17ன்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் (அரசு ஆணை 153 பநிசீது (எப்ஆர் iii துறை, நாள் 8.8.2000)

## *அரசு விடுமுறைகளை விடுப்பு சேர்தது அனுபவித்தல்*

அரசு விதிமுறைகளை கீழே குறிப்பிட்டப்படி விடுப்புகளுடன் முன்இணைப்பாகவோ அல்லது பின் இணைப்பாகவோ சேர்த்து அனுபவிக்கலாம். (அரசு க.எண். 64435/F.R.V/94–5. P. & A.R., நாள் 27.3.95 (30.5.94லிருந்த அமுலில் உள்ள நடைமுறை).

(1) ஈட்டிய விடுப்பு ஒரே சமயத்தில் 180 நாட்களுக்கு மேல் எடுக்கக்கூடாது (ஆனால் 240 நாட்கள் வரை சேர்த்துக் கொள்ளலாம்).

(2) அரசு விடுமுறைகளை விடுப்புகளுடன் சேர்த்து எடுக்கலாம். தற்செயல் விடுப்பு தவிர அனைத்து வகை விடுப்புகளையும் ஒன்றாக சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

(3) ஆனால் பதிலாள் நியமனம் செய்யப்பட்டிருப்பின் விடுப்புக்களை இணைக்க முடியாது.

(4) மருத்துவச் சான்று வழங்கும் நாளிலிருந்து மருத்துவ விடுப்பு தொடங்கும். உடல் நலச் சான்றிதழின்படி பணி ஏற்க வேண்டிய நாள் விடுமுறை நாளாயின் விடுமுறை முடிந்து பணி ஏற்கலாம்.

(5) சொந்த அலுவல்கள் பேரில் ஈட்டா விடுப்பு, ஈட்டிய விடுப்புடன் சேர்த்து எடுத்தால், மொத்தம் ஆறு மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது (TNLR 14).

## பொதுவான விவரங்கள்

(1) ஒவ்வொரு விடுப்புக்கும் வரையறை செய்யப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு அனைத்து விடுப்புகளும்இணைத்து எடுக்கலாம் (TNLR 14).

(2) (அ) பணி அமர்வுக்கான ஆணைகளுக்காக ஒருவர் காத்திருக்க நேர்ந்தால், அக்காலம் கட்டாய காத்திருப்பு காலமாகக் கருதப்படும். இக்காலத்திற்கு ஊதியம் மற்றும் பிற படிகள் கிடைக்கும். அடிப்படைவிதி 1(6) அயல் பணியிலிருந்து திரும்புபவருக்கு அரசாணை எண். 420, நிர்வாகத்துறை, நாள் 27.9.1990ல் கண்டுள்ளபடி விடுப்பு வழங்கப்படும்.

(ஆ) விடுப்பு முடிவுற்றபின், பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர், பணியிடம் காலாவதியாகி வேறு பணியிடம் கிடைக்காதவர், தனக்கு அடுத்த உயர் அலுவலரை நேரில் சந்தித்து, பணியிடம் ஒதுக்கி கோரவேண்டும் (அரசு கடிதம்எண். 44890/எப்.ஆர்/iii 95-1 P&A.R. நாள் 28.8.96).

(இ) அடிப்படை விதி 9(6) (பி)ன் கீழ், கட்டாய காத்திருப்பு காலமாக கருதப்பட வேண்டியிருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு அரசு அலுவலர் நேரடியாக தினந்தோறும் சென்று கையெழுத்திட வேண்டும். (அரசு கடிதம் எண். 44890/எப்ஆர்/iii95-1 P&A.R. நாள் 28.8.96).

(3) 5 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு விடுப்பு காலத்திற்கு F.R.26(bb) சான்று வழங்கத் தேவையில்லை (அ.ஆ.எண். 777, நிதி, நாள் 16.7.1976).

(4) விடுப்பு ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை என்றாலும் ஒரு மாதத்திற்கு மட்டும் விடுப்பு ஊதியம் வழங்கப்படும். (அரசாணை எண். 278 நிதி, நாள் 30.3.1978). முன் அறிவிப்பின்றி விடுப்பில் சென்றால் விடுப்பு ஊதியம் கிடைக்காதது (G.O.(Ms.) No. 1561, நிதித்துறை, நாள் 23.11.79).

(5) அயற்பணியிலிருந்தால் அயற்பணியாளர் விடுப்பூதியத்தை முதலில் வழங்கிவிட்டு பின்னர் பணிப்பதிவேடு பராமரிக்கும் அலுவலரிடமிருந்து Reimburse செய்து கொள்வார் (Govt.Lr.No. 58175/F.R. II88–2, Finance. dt. 27.9.88). தமிழக அரசுச் சார்ந்த நிறுவனமாயின், ஒரு ஆண்டு பணிக்காலத்திறகு ஒரு மாதம் என்ற அளவில் விடுப்பு அந்நிறுவனத்தால் வழங்கப்படும். மிகையான காலத்திற்கு பணிப்பதிவேடு பராமரிக்கும் அலுவலர் வழங்க வேண்டும்.

(6) விடுப்புக் காலத்தில் பணி துறப்பு செய்தால் முன்னரே ஒப்புதல் வழங்கப்பட்ட ஈட்டிய விடுப்பாயின், விடுப்பு முடிந்த நாளிலிருந்து பணி துறப்பு ஏற்கப்படும். விடுப்பு ஊதியம்முனன்ரே வழங்கப்பட்டிருப்பின் அதை பிடித்தம் செய்யக் கூடாது. (அரசாணை எண். 152, நிதித்துறை, நாள் 5.1.1982).

அட்டவணை

<table>
<tr><th rowspan="2">விடுப்பின் பெயர்</th><th colspan="2">உயர்நிலைப்</th><th colspan="2">அடிப்படைப் பணி</th></tr>
<tr><th>10(a)(i) & தகுதிகாண் பருவத்தினர்</th><th>தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர். நிரந்தரமாக்கப்பட்டவர். 15 ஆண்டு பணி முடித்த அடிப்படைப் பணியாளர்</th><th>தகுதிகாண் பருவத்தினர் மட்டும்</th><th>தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் 15 ஆண்டு பணி முடிக்காதவர்</th></tr>
<tr><td rowspan="2">மருத்துவ சான்றுடன் ஈட்டா விடுப்பு (UEL on MC)</td><td>இல்லை– த.நா.வி.வி.23 உபவிதி 2</td><td>2–5 வருடம் = 90 நாட்கள்<br>5–10 வருடம் = 180 நாட்கள்<br>10–15 வருடம் = 270 நாட்கள்<br>15–20 வருடம் = 360 நாட்கள்<br>20 வருடத்திற்கு மேல் = 540 நாட்கள்</td><td>தற்காலிகம் : இல்லை (த.நா.வி.வி.23 உபவிதி 2)<br>தகுதிகாண் பருவத்தினர் : ஒவ்வொரு வருடத்திற்கும் 10 நாட்கள் வீதம்</td><td>ஒவ்வொரு முடிவுற்ற வருடத்திற்கும் 10 நாட்கள் வீதம்</td></tr>
<tr><td colspan="2">முறையான இரண்டு வருட பணி முடித்த தகுதி காண் பருவத்தினர்<br>0–2 வருடம் –இல்லை<br>2–5 வருடம் –90 நாட்கள்<br>5–10 வருடம் –180நாட்கள்</td><td colspan="2">அடிப்படைப் பணியாளர்கள் முறைப்படுத்திய நாளிலிருந்து 15 ஆண்டுகள் முடித்திருந்தால், உயர்நிலை பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதேஅளவில் மருத்துவ சான்றுடன் ஈட்டாத விடுப்பு எடுக்கலாம்.</td></tr>
<tr><td>சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு</td><td>இல்லை</td><td>0–10 வருடம் – 90 நாட்கள்<br>10 வருடங்களுக்கு மேல் – 180 நாட்கள்</td><td colspan="2">தகுதி இல்லை. முறைப்படுத்திய தேதியிலிருந்து 15 ஆண்டுகள் முடித்திருந்தால், உயர்நிலைப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதே அளவில் சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு எடுக்கலாம்.</td></tr>
</table>